அந்த முகத்தை வரைய எந்த ஓவியனாலும் முடியாது. அது அதிகார தோரணையுடன் காணப்பட்டது. அவர் பேசுவாரானால், உலகம் முழுவுக்கு வந்து விடும் போல் காணப்பட்டது, ஆனால் அவருடைய கண்களில் இரக்கமும் தயவும் அன்பும் சுடர்வீசின

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**[1933–ம் வருடம் – அதாவது சகோதரன் பிரன்ஹாமுக்கு ஏறக்குறைய 24 வயதாகும் போது அவருடைய ஜீவியத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள் சிலவற்றை இங்கு கொடுத்துள்ளோம். இது *இயற்கைக்கு மேம்பட்டவை – வில்லியம் பிரன்ஹாமின் ஜீவிய சரிதை (புத்தகம் – 2)* – லிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இங்கு "பில்லி" என்று குறிப்பிடுவது "தீர்க்கதரிசி வில்லியம் பிரன்ஹாமைக்" குறிக்கிறது.]**

---

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய சித்தத்தை அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் தான் சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய சிந்தைகளை வேதாகமத்தில் வரைந்து வைத்துள்ளார் என்றும் அதை அறிய வேதம் வாசித்து ஜெபிக்க வேண்டும் என்றும் பில்லியின் மேய்ப்பர் பிரசங்கிப்பதை அவர் கேட்டார். அது பில்லியைத் தொட்டது. எனவே அவர் ஆர்வமுடன் வேதம் வாசித்து, தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

அவர் பத்து வருடங்களுக்கு முன்பு தம்முடைய ஏழாம் வகுப்பு படிப்பை முடித்ததிலிருந்து அவர் அநேக புஸ்தகங்களை

வாசித்திருக்கவில்லை, எனவே அவருடைய வாசிக்கும் திறமை மந்தமாகத்தான் இருந்தது. வேதத்தின் பொதுவான அர்த்தங்கள் புரிந்தாலும், நேபுகாத்நேச்சார், செருபாபேல், பெனாயா போன்ற கடினமான பழைய ஏற்பாட்டு பெயர்களை அவரால் உச்சரிக்க இயலவில்லை. மேலும் கிங் ஜேம்ஸ் ஆங்கில வேதாகமத்திலுள்ள வாக்கிய அமைப்புகள் அவருக்கு பெரும் போராட்டமாக அமைந்தன. அவர் 1933—ம் வருடத்தின் தொடக்கத்தில் தம்முடைய முதலாவது செய்தியைப் பிரசங்கித்த போது, வேதாகமத்தை சத்தமாக வாசிக்க தம்முடைய நாவை அவர் நம்பவில்லை. அதற்குப் பதிலாக வேதபாகத்தை அவருக்காக வாசிக்கும்படி, மேடையில் அவருக்கு பின்பாக உட்கார்ந்து கொண்டிருக்கும் ஹோப்பையே (பிரன்ஹாமின் மனைவி) வற்புறுத்தினார். அதற்காக அவளுக்கு அவர் சைகை காட்டி தெரிவித்தார். அவருடைய பாடமானது *ஒழுக்கங்கெட்ட விதத்தில் ஜீவித்த சிம்சோனிடத்தில் தேவன் கொண்டிருந்த கிருபையும் பாதுகாப்பும்* என்பதாக இருந்தது. ஹோப், நியாயாதிபதிகளின் புஸ்தகத்திலிருந்து வாசிக்க, பில் அதை விவரிக்கத் தொடங்கினார். உடனே இயேசு, யோவான் 14—ம் அதிகாரத்தில் கூறினதை சபையோரிடம் வாசித்துக் காட்ட அவர் விரும்பினார். அவர் ஹோப்பிடம்

தலையசைத்து சைகை காட்டினார். அவள், “**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக**” என்று வாசிக்கத் தொடங்கினாள், பில் உடனே நிறுத்தி, “வேதாகமம் கூறுவது உங்களுக்குக் கேட்டதா; நீங்கள் கலங்கிப் போகக் கூடாது” என்றார். பின் மீண்டும் ஹோப்பிடம் தலையசைத்து சைகை காட்டி, தொடர்ந்து வாசிக்கச் சொன்னார், அவள், “**தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்**” என்று வாசித்தாள், மீண்டும் பில்லி நிறுத்தி விட்டு, “நீங்கள் அதைச் செய்வீர்களா? நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்கிறீர்கள்?” என்று கேட்டார். அவர் தொடர்ந்து அலங்கோலமாகவும், மேடுபள்ளமாகவும் அவருடைய முதல் பிரசங்கத்தைப் பிரசங்கித்தாலும், அவர் இருதயத்தில் இருந்த அந்த உத்தமம் அவரை நல்ல பிரசங்கம் செய்பவராக ஆக்கியது.

அவருடைய பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களைக் கவனித்தார், எல்லா பிரன்ஹாம் (பிரன்ஹாமின் தாயார்) தம்முடைய மகனின் வார்த்தைகளைக் கவனமாகக் கேட்டார்கள். பில்லியின் ஜீவியத்தில் நடந்த வியக்கத்தக்க மனமாற்றமும் அவர் அற்புதமாக

சுகமடைந்ததும் அவர்களுடைய ஆத்துமாவைத் தட்டி எழுப்பியது. பில்லியின் தாயாராகிய எல்லா பிரன்ஹாம் தம்முடைய 39—ம் வயதில் இயேசு கிறிஸ்துவுக்குத் தம்முடைய ஜீவியத்தை ஒப்புக்கொடுத்தார்கள். சந்தோஷம் நிரம்பி வழிந்தது, பில்லி தம்முடைய தாயாருக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்.

அவருடைய தாயாருடைய மனமாற்றம் அவரை உற்சாகப்படுத்தினதால், பில்லி தம்முடைய தகப்பனாரையும் சபைக்கு வரும்படி வற்புறுத்தினார். சார்லஸ் பிரன்ஹாமோ (பில்லியின் தகப்பனார்) அதை மறுத்தார், பில்லி முழுமுயற்சியுடன் வற்புறுத்தியும் அவர் அசைந்து கொடுக்கவேயில்லை. அது பில்லியை கவலைப் பட செய்தது. ஆனாலும் இழக்கப்பட்டவர்களின் பேரிலுள்ள அக்கறையை அது எடுத்துப்போட முடியவில்லை. ஏனெனில் அவருடைய 14 வது வயதில் அவர் இழக்கப்பட்டவர்கள் இருக்கும் ஸ்லத்திற்கு போயிருந்த போது கிடைத்த திகிலூட்டும் அனுபவமும் அதற்குக் காரணமாயிருந்தது. இப்பொழுது, பில்லி, “அன்புள்ள தேவனே, என்னுடைய தகப்பனார் அதைப்போன்ற இடத்திற்குப் போகும்படி நீர்

அனுமதிக்க வேண்டாம். தயவுகூர்ந்து அவர் உம்முடைய கிருபையை காணும்படி செய்யும், அவர் உம்முடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளட்டும்" என்று அடிக்கடி ஜெபித்து வந்தார்.

ஒரு நாள் இரவு வேளையில், பெரும்பாலான அவருடைய குடும்பத்தினர் படுக்கைக்குச் சென்ற பிறகு, பில்லி முன் அறையிலிருந்த வைக்கோல் மெத்தையின் மேல் படுத்தவாறு அவருடைய தகப்பனாருக்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். அவருடைய தகப்பனாரோ உள்ளூர் மதுக்கடை ஒன்றில் குடித்துக் கொண்டிருந்தார். பில்லி ஜெபித்த வேளையில், ஒரு சத்தம், "எழுந்திரு" என்று கூறுவது போன்ற ஒரு உணர்வைப் பெற்றார். அவர் எழுந்து வாசலுக்கு வெளியே நடந்து சென்றார். ஏனென்று அவருக்குத் தெரியவில்லை, ஆனால் அவர் ஏதோவொன்றின் பக்கமாக இழுக்கப்படுவது போன்று உணர்ந்தார்.

வீட்டிற்குப் பின்னால், துடைப்பம் புல் (broomsage) மட்டுமீறி வளர்ந்து கிடந்தது. அவை சிவப்பு நிறத்தில் முழங்கால் உயரம் வரை வளர்ந்து கிடந்தது. அதற்குக் குறுக்காக ஒரு நடை பாதை சென்றது. பில்லி நட்சத்திர வெளிச்சத்தில் அப்பாதையைப் பின்தொடர்ந்து போனார். அந்த

மேய்ச்சல் நிலத்தின் நடுப்பகுதியை அவர் அடைந்த போது, அவர் முழங்கால்படியிட்டு, தம்முடைய தலையை தாழ்த்தி, தம்முடைய கரங்களை மடக்கிக் கொண்டு, தம்முடைய தகப்பனாருக்காகத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் கண்களைத் திறந்து பார்த்தார், அவருக்கு முன்னே பத்து அடி தூரத்தில் ஒரு மனிதர் நின்று கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். அவர் ஒரு வழக்கத்திற்கு மாறான மனிதராகவும், குட்டையான சிறிய தோற்றமுடையவராகவும், தம்முடைய தோள்கள் வரை மயிரைக் கொண்டவராகவும், வெண் வஸ்திரம் தரித்தவராகவும், நட்சத்திர வெளிச்சத்தில் தெளிவாக பார்க்கும்படியாக நின்று கொண்டிருந் தார். அந்த மனிதர் பில்லியின் பக்கவாட்டில் கிழக்கு திசையை நோக்கியபடி நின்று கொண்டிருந்தார். அவர் ஒரு அமைதியான மனிதராக இருந்தார். அவருடைய கரங்களை மடக்கிக் கொண்டும், அவருடைய ஒரு காலை மற்ற காலுக்கு சற்று முன்னால் வைத்துக் கொண்டிருந்தார். பில்லி அந்தக் கால்களை இரண்டாவது முறையாகப் பார்த்தார். நம்ப முடியாத அளவுக்கு அந்த கால்கள் தரையைத் தொடாமல் தரைக்கு மேலே அந்தரத்தில் நின்றன.

அவர் தம்முடைய சொந்த கைமுட்டியை போதுமான வலி உண்டாகுமளவுக்கு கடித்துக் கொண்டே, "இப்பொழுது, ஒரு நிமிடம் காத்திரு" என்று பில்லி நினைத்தார். "நான் தூங்கிக் கொண்டிருக்கவில்லை. இல்லை, நான் அங்கே உள்ளே அப்பாவுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன், ஏதோவொன்று இங்கே வெளியே வரும்படி சொன்னது... இங்கே இந்த மனிதர் நிற்கிறார்."

அது மிகவும் தத்ரூபமாக காணப்பட்டது. உயரமான புற்களில் வீசிய தென்றல் காற்றின் காரணமாக இந்த மனிதருடைய வெண் வஸ்திரம் காற்றில் அசைந்தது. பில் ஒரு துடைப்பக் குச்சியை ஒடித்து, பல்குத்தியைப் போன்று தம்முடைய வாயில் போட்டு மென்று கொண்டார். அவர், "அது கர்த்தராகிய இயேசுவைப் போன்று காணப்படுகிறதே. அது அவர் தானா என்று வியப்பாக உள்ளதே" என்று எண்ணினார்.

அவர் சிறிது அப்பால் நழுவிச் சென்று பார்த்தார். அப்போது அவரால் அம்மனிதருடைய முகத்தை சற்று அதிகமாக காண முடிந்தது. அவர் தம்முடைய தொண்டையைச் சரிசெய்ய, "ஊ—உம்" என்று கனைத்துப் பார்த்தார். அந்த மனிதர்

அசையவேயில்லை. பில்லி, “நான் அவரை கூப்பிடுவேன் என்று நம்புகிறேன்” என்று நினைத்து, “இயேசுவே?” என்று சத்தமாக அழைத்தார்.

அந்த மனிதர் திரும்பி, அவரை நோக்கி கரங்களை நீட்டினார்.

பில்லிக்கு ஞாபகம் உள்ள கடைசி காரியம் அதுதான். அவர் சுயநினைவை இழந்து, விழுந்தார், ஆனால் அந்த முகத்தை அவருடைய நினைவை விட்டு எடுத்துப் போடவே முடியவில்லை. அந்த முகத்தை வரைய எந்த ஓவியனாலும் முடியாது. அது அதிகார தோரணையுடன் காணப்பட்டது. அவர் பேசுவாரானால், உலகம் முடிவுக்கு வந்து விடும் போல் காணப்பட்டது, ஆனால் அவருடைய கண்களில் இரக்கமும் தயவும் அன்பும் சுடர்வீசின.

பொழுது புலர்ந்த போது, பில் தம்முடைய சுயநினைவிற்கு வந்தார். அவர் அப்போதும் துடைப்பப்புல் வயலிலேயே இருந்தார், குளிர்ந்த இரவுநேர காற்றின் காரணமாக நடுங்கிக்கொண்டிருந்தார். அவருடைய கண்ணீரால் பைஜாமா ஆடை ஈரமாகியிருந்தது. அவர் வீட்டிற்குச் சென்று உடையுடுத்தி விட்டு, அதைப்பற்றி அவருடைய மேய்ப்பருடைய

அபிப்ராயத்தைக் கேட்கும்படி உற்சாகத்தோடு கிளம்பி விட்டார்.